# நன்னிலம்

பாரம்பரிய பயன்தரு மரக்கன்றுகள், மூலிகைகள்
இயற்கைப் பசளைகள் இடப்பட்ட பராமரிப்பின் உற்பத்திகளினுடைய
பரிமாற்றத்திற்கான இல்லத்தின்

## திறப்பு விழா சிறப்பிதழ்

இடம் : 23/01, நெசவு நிலைய வீதி,
மஞ்சந்தொடுவாய், மட்டக்களப்பு.

காலம் : 19.03.2022 - சனிக்கிழமை

நேரம் : பி.ப 03:00 மணி

ஏற்பாடு

மூன்றாவதுகண்
உள்ளூர் அறிவு திறன்
செயற்பாட்டுக் குழு

நல்லுணவு நோயற்ற வாழ்வின் அடிப்படை
நன்னிலத்தில் நல்லுணவுடன் நலமாக வாழுவோம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பத்தையென்றும் செத்தையென்றும்
வெட்டி அழிக்கிறோம்
புல்லு என்றும் பூண்டு என்றும்
பிடுங்கி எறிகிறோம்

களைகளென்றும் முட்களென்றும்
அழித்து ஒழிக்கிறோம்
இலகுவழியில் இரசாயனத்தால்
எரித்து அழிக்கிறோம்

உணவென்றும் மருந்தென்றும்
இருக்கும் செல்வத்தின்
உண்மை அறிவை எப்படித்தான்
இழந்து போய்விட்டோம்? - நாங்கள்
இழந்து போய்விட்டோம்!

விபரம் அறியா மனிதராக
மாறிப் போய்விட்டோம்
உண்மை அறிவை எப்படித்தான்
இழந்து போய்விட்டோம் - நாங்கள்
இழந்து போய்விட்டோம்

உண்மை அறிவைத் தேடிப்பெற்று
உயர்வு கொள்ளுவோம்
உலக இயல்பைக் காத்து
உயிர்கள் வாழும் வழிகள் காணுவோம்
உலக இயல்பைக் காத்து
உயிர்கள் வாழும் வழிகள் காட்டுவோம்

உள்ளம் உவகை கொள்ளும் வாழ்வை
உலகில் ஆக்கி மகிழுவோம்
உயிர்கள் எல்லாம் இயற்கை மடியில்
வாழ வாழுவோம்.

**சி.ஜெயசங்கர்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எங்களின் அறிவில் எங்களின் திறனில்
தங்கி நிற்போம் நாங்கள்
எங்களின் நிலத்தில் எங்களின் விதைப்பில்
விளைவித்தே வாழ்வோம்

கட்டுப்படுத்தும் வாழ்க்கை முறைகளை
நீக்கி எழுந்திடுவோம்
சூழலிலிணைந்து வாழும் வழிகளை
மீளவும் ஆக்கிடுவோம்

***சி.ஜெயசங்கர்***






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## "நன்னிலம்" உருவாக்கமும் என்னுடைய அனுபவமும்.

2020ஆம் ஆண்டுக்கான நூறுகோடி மக்களின் எழுச்சியானது பெண்களுக்கும் பூமித்தாய்க்கும் எதிரான வன்முறைகள் அற்ற வாழ்தலைக் கொண்டாடுவோம்! எழுச்சி கொள்வோம்! மரபு ரீதியான உணவுகளை நஞ்சற்ற முறைகளில் உற்பத்தி செய்வோம்! தோட்டங்கள் செய்வோம்! உடல் உள வலுமிக்கவர்களாய் நோய்களின் அச்சம் அற்றவர்களாய் வாழ்வோம்! என்ற தொனிப்பொருளில் கொண்டாடுவதற்கான ஏற்பாடுகள் நடைபெற்றுக் கொண்டிருந்தன.

கொரோணாக் காலச் சூழலிலும் ஓய்வு நேரங்களில் மூன்றாவதுகண் நண்பர்கள் குழுவின் சார்பாக மேற்படி செயற்பாடுகளில் நான் ஈடுபட்டுக்கொண்டிருந்தேன். இதற்காக எமது பாரம்பரிய விதைகளைத் தேடி பல இயற்கை விவசாய உற்பத்தியாளர்கள் மற்றும் பாரம்பரிய மூலிகைகள், கிழங்கு வகைகள் சார்ந்து அறிவுடைய பலரையும் நண்பர்களுடன் சேர்ந்து வந்தாறுமூலை, மண்டூர், குமாரபுரம், கோடைமேடு, ஊறணி போன்ற இடங்களில் சந்தித்தேன். சில பாரம்பரிய உள்ளூர் விதை வகைகளையும் பெற்றுக்கொண்டேன்.

இவ்வாறாக சந்தித்தவர்களின் அனுபவப் பகிர்வுகள் மற்றும் ஆக்கபூர்வமான ஆலோசனைகள் எனக்கு இத்தகைய செயற்பாடுகளில் தொடர்ந்தும் ஈடுபடுவதற்கான உற்சாகத்தைத் தந்தன.

கொரோணாத் தொற்றுக் காலம் காரணமாக வீட்டில் இருந்து வேலை செய்யும் வாய்ப்பு, மகனும் பாடசாலை செல்ல முடியாது வீட்டிலே இருந்த காரணங்களால் என்னால் சில பயிர்களை (மிளகாய், அவரை, சுரக்காய், தும்பங்காய், பாகற்காய்) இயற்கைப் பசளையை மட்டுமே பாவித்து வீட்டிலே உற்பத்திசெய்து பயன்பெற முடிந்தது. இத்தகைய எனது செயற்பாடுகளுக்கு முழு உற்சாகத்தையும் ஆதரவினையும் எனது நண்பர்களும் குடும்பத்தாரும் வழங்கிக்கொண்டிருந்தனர்.

எனக்கு பாடசாலைக் காலத்திலிருந்து மூலிகைச் செடிகள், கொடிகள், மரங்கள் சார்ந்தும் அதன் பயன்கள் சார்ந்தும் ஆர்வம் இருந்தமை குறிப்பிடத்தக்கது. அதாவது எனது க.பொ.த உயர்தரத்திற்கான தனிச் செயற்திட்டத்திற்காக மூலிகை மரங்களைக் காயவைத்து ஒட்டி அதன் பயன்களையும் எழுதிச் சமர்ப்பித்திருந்தேன். பின்னர் வீட்டில் காய்ந்த மிளகாய் விதைகளைப் போட்டு மரங்களை உருவாக்கியுமிருந்தேன். ஆனால் முழுமையான ஈடுபாடு இருக்கவில்லை. எனினும் 2020 ஆம் ஆண்டு நூறுகோடி மக்களின் எழுச்சி செயல்வாதமானது என்னை முழு ஈடுபாட்டுடன் இந்தச் செயற்பாட்டினை மேற்கொள்ளத் தூண்டியிருந்தது.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இன்று நமது சமூகத்தில் பலரும் பல நோய்களால் அல்லல்பட்டுக் கொண்டிருக்கின்றனர். வைத்தியசாலைகள் நோயாளர்களால் நிரம்பி வழிகின்றன. எமது பாரம்பரிய வைத்தியத்தினையும், உணவினையே மருந்தாக உட்கொண்ட காலங்களையும் மறந்து, அந்நிலைமைகளை இல்லாதொழித்து நோயாளர்களாய் இருக்கிறோம்.

சமூக அக்கறையுடன் உள்ளூர் அறிவு, திறன், உற்பத்திகள் சார்ந்து செயற்படும் மூன்றாவதுகண் நண்பர்கள் குழுவில் ஒருவராயிருப்பதனால், இயற்கையின் ஒரு பகுதியாகவேதான் மனிதர்கள் இருக்கிறோம் என்பதான விடயங்கள் சார்ந்து சிந்திக்கச் செயற்பட ஆசை கொண்டு அதையே என் வாழ்வில் ஒரு பகுதியாக ஆக்கிக் கொள்ளவும் எண்ணினேன். அந்த வகையில் பல மூலிகை மரங்களைத் தேடினேன். சந்தர்ப்பம் கிடைக்கும் வேளைகளில் பல பாரம்பரிய வைத்தியர்களுடன் உரையாடினேன். தற்போது சிறிய அளவிலான மரக்கன்றுகளே சேகரிப்பில் இருக்கின்றன. தொடர்ந்தும் என்தேடலும் சேகரிப்பும் "நன்னிலத்தால்" வலுப்பெறும் என நம்புகிறேன்.

<u>**சிந்துஉஷா விஜேந்திரன்**</u>






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நன்னிலங்களை உருவாக்கி பூமித்தாயைப் பாதுகாக்கும் பெண்ணிலைவாதச் செயல்வாதியாக திருமதி சிந்துஉஷா விஜேந்திரன்

திருமதி சிந்துஉஷா விஜேந்திரன் அவர்களின் தேடல்களாலும், செயற்பாடுகளாலும் நன்னிலத்திற்கான உள்ளூர் மரம் செடி கொடி இனத்தாவரங்கள் உற்பத்தி செய்யப்பட்டு பரிமாற்றஞ் செய்யும் நன்னிலம் எனும் பெயரில் அமைந்த இல்லம் ஆரம்பித்து வைக்கப்படுகின்றது.



இதனை நண்பி சிந்துஉஷாவுடன் சேர்ந்து ஆரம்பித்து வைப்பதில் மூன்றாவதுகண் உள்ளூர் அறிவு திறன் செயற்பாட்டுக் குழு நண்பர்களாகிய நாம் மகிழ்ச்சியடைகின்றோம்.

திருமதி சிந்துஉஷா விஜேந்திரன் அவர்கள் நாடகமும் அரங்கியலும் பாடத்தினை சிறப்புக் கற்கையாகப் பெற்றுள்ள ஒரு பட்டதாரி, மேடை நாடகங்கள், சிறுவர் நாடகங்கள், பாரம்பரியக் கூத்துக்கள் முதலிய அரங்க ஆற்றுகைகளில் பங்குபற்றி வரும் கலைஞி. கலாசார அபிவிருத்தி அலுவலராகப் பணியாற்றுபவர்.

தானுண்டு தன்தொழிலுண்டு என்று மட்டுப்படுத்திக் கொண்டு வாழாது ஓய்வு நேரங்களில் சமூக அக்கறையுடன் கலை பண்பாட்டுச் செயல்வாதங்களில் ஆர்வத்துடனும், ஈடுபாட்டுடனும் பங்குபற்றி வருபவர். இவருடைய இத்தகைய ஆர்வங்கள் காரணமாக மூன்றாவதுகண் நண்பர்கள் குழுவின் ஓர் அங்கத்தவராகிப் பல்வேறு செயல்வாதங்களில் பங்கெடுத்து வருகின்றார். உதாரணமாக மீளுருவாக்கஞ் செய்யப்பட்டுள்ள பெண் பாத்திரங்களை ஆற்றுகை செய்து வரும் ஒரு பெண் கூத்துக் கலைஞர், பெண்களுக்கு இழைக்கப்படும் வன்முறைகளுக்கு எதிரான ஆற்றுகையில் ஆதித்தாயாக ஆற்றுகை செய்து வருபவர், நீதிக்கான பறையிசையணியின் ஆற்றுகையாளர்.

இத்தோடு இவருக்குள் இயல்பாகவே மரஞ் செடி கொடிகள் மீதிருந்த ஈடுபாடும் ஆர்வமும் நூறு கோடி மக்களின் எழுச்சி 2021இன் கருத்தியலாலும் செயல்வாதத்தினாலும் மேலும் உத்வேகம் பெற்று நன்னிலம் உருவாக்கம் பெற்றிருக்கின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மரபணு மாற்றஞ் செய்யப்படாத, நம் நிலத்தின் தட்ப வெப்ப நிலைமைகளுக்கேற்ற உள்ளூர் விதையினங்களைத் தேடிப் பெற்று இயற்கைப் பசளையிட்டு அவற்றை மரஞ் செடி கொடிகளாக்கி நன்னிலங்களை உருவாக்கி பூமித்தாயைப் பாதுகாக்கும் உலகளாவிய பெண்ணிலைவாதச் செயல்வாதத்தின் ஓர் அங்கமாகவும், இச்செயல்வாதத்தை முன்னெடுக்கும் செயல்வாதிகளுள் ஒருவராகவும் நண்பி சிந்துஉஷா விஜேந்திரன் அவர்களைக் காண்பதிலும் அறிமுகப்படுத்துவதிலும் நாம் மகிழ்வும் பெருமையும் அடைகின்றோம்.

**து. கௌரீஸ்வரன்**

## நாங்கள் வாழ வேண்டும்...

நாங்கள் வாழ வேண்டும் இந்தப் பூமியில்
என்றும் நாங்கள் வாழ வேண்டும் இந்தப் பூமியில்

இயற்கை தந்த
இனிய வாழ்வை
இணைந்து மகிழ்ந்து - வாழ வேண்டும்

இயற்கை மடியினில் கூடுகள் கட்டி
இயற்கை மகிழ்ந்திட வாழ்வினை ஆக்கி
இணைந்து மகிழ்ந்து உயர்வு பெற்று வாழ வேண்டும்.

துயர்களை எல்லாம் துச்சமாய் எண்ணி
தடைகளை எல்லாம் - வெற்றிப்படிகளாய் மாற்றி
துணிந்து நிமிர்ந்து உயர்வு பெற்று வாழ வேண்டும்

அன்பின் வழியிலே வாழ்வினைக் கூட்டி
வன்முறையற்ற வாழ்வினை ஆக்கி
இணைந்து மகிழ்ந்து உயர்வு பெற்று வாழ வேண்டும்.

**மூன்றாவது கண் - ஜெயசங்கரின் பாடல் - 3வது பந்தி போரில் இழப்புக்களை சந்தித்த பெண்கள் எழுதியது. 4வது பந்தி வன்றைகளில் தப்பி வாழும் பெண்கள் எழுதியது.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நனவாகும் இயற்கையுடன் வாழ்தல்

கலாசார அபிவிருத்தி உத்தியோகத்தராக காத்தான்குடி பிரதேச செயலகத்தில் கடைமை செய்யும் சிந்துஉஷா, கதிரேசன் ஜெயந்தி தம்பதியினருக்கு மூத்த மகளாக 1987.09.24 ஆந் திகதி மஞ்சந்தொடுவாய் கிராமத்தில் பிறந்தார். இவருக்கு இரண்டு தங்கைமார் உண்டு. தனது ஆரம்பக் கல்வியை மஞ்சந்தொடுவாய் பாரதி வித்தியாலயத்திலும், பத்தாந் தரத்திலிருந்து உயர்தரம் வரை கல்லடி விவேகானந்த பெண்கள் படசாலையிலும் படித்தார். கலைப்பிரிவில் சித்தி எய்து பல்கலைக்கழகம் சென்ற சிந்துஉஷா நாடகமும் அரங்கியலும் பாடத்தில் விசேட பட்டப்படிப்பை முடித்து தற்போது கலாசார அபிவிருத்தி உத்தியோகத்தராகப் பணிபுரிகின்றார்.

இவருக்கு பாடசாலைக் காலத்திலிருந்தே மூலிகை மரங்கள் சார்ந்தும் அவற்றின் பயன்கள் சார்ந்தும் அறிவதில் ஆர்வமிருந்தது. அதாவது உயர்தரம் படிக்கும்போது தனிச் செயற்திட்டத்திற்காக மூலிகை மரங்களை காயவைத்து ஒட்டி அதன் பயன்களையும் எழுதி சமர்ப்பித்திருந்தார். இச்செயற்பாடே அவருக்கு தாவரங்கள் மீது காதல் ஏற்பட அத்திவாரமிட்டது. தொடர்ச்சியாக வீட்டில் காய்ந்த மிளகாய் விதைகளை போட்டு மரங்களை உருவாக்குவதும் அவரது பொழுதுபோக்கானது.

இச்சந்தர்பத்தில்தான் 2020ஆம் ஆண்டு நுறுகோடி மக்களின் எழுச்சி கருப்பொருள் (பெண்களுக்கும் பூமித்தாய்க்கும் எதிரான வன்முறைகள் அற்ற வாழ்தலைக் கொண்டாடுவோம்! எழுச்சி கொள்வோம்! மரபு ரீதியான உணவுகளை நஞ்சற்ற முறைகளில் உற்பத்தி செய்வோம்! தோட்டங்கள் செய்வோம்!) முன்வைக்கப்பட்டது. அவரது கனவுகளையும் விருப்பங்களையும் பேசுவதற்கும் நடைமுறைப்படுத்துவதற்குமான களமாக இருந்த மூன்றாவதுகண் உள்ளூர் அறிவு திறன் செயற்பாட்டுக்குழுவில் ஒரு அங்கத்தவராக இருந்த சிந்து இச்செயல்வாதத்தில் தன்னை முழுமையாக ஈடுபடுத்திக்கொண்டார். பாரம்பரிய விதைகள், முகிலிகைகள், பயிர் இனங்கள் பற்றித் தேட முற்பட்டார். அவற்றோடு தொடர்புபட்டோரைத் சந்தித்து அவர்களிடமிருந்து தாவரங்கள் பற்றிய அறியும் பெற்றுக்கொண்டார். தனது அலுவலக நேரம் தவிர்ந்த ஏனைய நேரங்களை இத்தேடலுக்காக செலவிட்டார்.

இதன் விளைவாக அவரது சிறிய பரப்புக் காணியினுள் வீடு தவிர ஏனைய பகுதிகள் பச்சைப்பசேலாக காட்சியளிக்கத் தொடங்கின. இவரது விருப்பை அறிந்த அவரது இணையரான விஜேயந்திரனும், மகன் கிறிஸ்ரியானும் அவர்களது ஒத்துழைப்பையும் சிந்துவிற்கு வழங்கி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வருகின்றார்கள்.

இன்று அறுவடை "நன்னிலம் திறப்பு விழா". சிந்துஉஷாவின் இயற்கையுடன் வாழ்தலின் ஒரு பகுதி நனவாகின்றது. அவரது குடுப்பத்தாருடனும், நண்பர்களுடனும் இந்நிகழ்வு நடைபெறவிருக்கின்றது.

"நல் உணவே நோயற்ற வாழ்வின் அடிப்படை. நன்னிலத்தின் நல் உணவுடன் நலமாக வாழ்வோம்."

நிரோஷினிதேவி. ம







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மாண்புபெறும் உள்ளூர் பாரம்பரிய வைத்தியர்கள்

நன்னிலத்தின் திறப்பு விழா நாளில் உள்ளூர் பாரம்பரிய மருத்துவர்கள் இருவரை மாண்பு செய்வதில் நாம் பெருமை கொள்கின்றோம். உள்ளூர் பாரம்பரிய மருத்துவத்தின் ஆதாரமாக உள்ளூர் தாவரங்கள் விளங்கி வருகின்றன. உள்ளூர் தாவரங்களின் மகத்துவத்தினையும் பயன்களையும் அறிந்து அவற்றைப் பிரயோகித்து வரும் முதுசொம்களாக உள்ளூர் பாரம்பரிய மருத்துவர்கள் உள்ளனர். எனவே உள்ளூர்த் தாவரங்களை மீளுருவாக்கஞ் செய்யும் இச்செயல்வாதத்தின் ஓர் அம்சமாக உள்ளூர்ப் பாரம்பரிய மருத்துவர்களுக்கான மாண்பு செய்தலும் நடந்தேறுகின்றது.

## ALM. அப்துல் அஸீஸ் (பாரம்பரிய வைத்தியர்)



இல-79, அமானுல்லா வீதி, காத்தான்குடியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட இவர் 5வது பரம்பரையாக பாரம்பரிய வைத்தியத் தொழிலைச் செய்து வருகிறார். தனது அப்பாவின் வைத்தியச் செயற்பாடுகளில் சிறுவதில் இருந்து உதவிகள் செய்து வந்த இவர் அவரது தந்தை இறந்த பின்பு கல்விக்காக வேண்டி வெலிகமயில் இருந்த தனது மாமாவுடன் வசிக்க ஆரம்பித்தார். அக்காலத்தில் தனது மாமாவின் பாரம்பரிய வைத்தியச் செயற்பாடுகளில் தந்தைக்கு உதவியது போலவே உதவிகள் செய்துவந்தார். ஆசிரியர் நிமனமும் பெற்று அங்கேயே சில காலங்கள் தொழில் புரிந்தார். பாரம்பரிய வைத்தியத்துறை சார்ந்து பல அறிவுகள் இருந்தும் அதை செயற்படுத்துவதற்குரிய ஆர்வம் அப்போது ஏற்படவில்லை.

திருமணமாகி 1987 காலப்பகுதியில் மீண்டும் காத்தான்குடிக்கு வந்து சேர்ந்தார். அக்காலத்தில் இன முரண்பாடுகள் காரணமாக நாட்டில் ஏற்பட்ட அசாதாரண சூழ்நிலைகளால் பலர் உடைவு, முறிவு சார்ந்த உபாதைகளுக்கு உள்ளாகியமையால் சமூகம் சார் அக்கறையுடன் அவர்களுக்கான வைத்தியத்தினைச் செய்ய ஆரம்பித்தார். சுமார் 35வருடங்களாக இன்றுவரை உடைவு, முறிவு சார்ந்த வைத்தியத்தினைச் செய்து வருகிறார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அரச சேவையில் இருந்தமையினால் பாரம்பரிய வைத்தியத்தில் முழுமையாக ஈடுபடமுடியாமலும் அதற்கான அரச அங்கிகாரத்தினைப் பெறாமலும் இருந்த இவர் ஓய்வுபெற்ற பின்னர் 1999ம் ஆண்டு இலங்கை அரச ஆயர்வேத வைத்திய சபையில் பதிவு செய்து கொண்டு முழுமையாக ஈடுபட்டு இவ்வைத்தியத் துறையில் செயற்பட்டார்.

பாரம்பரிய வைத்தியத் துறை சார்ந்து சகலவிதமான (சுவாசம் தொடர்பான நோய்கள், கர்பம் சார்ந்த நோய்கள், வயிறு சார்ந்த நோய்கள், மூல நோய்கள்...) அறிவுகள் இருந்தாலும் உடைவு, முறிவு (கடுப்பு, பிடிப்பு, மூட்டுவலி, நரம்பியல்) என்பவற்றிற்கே இவர் பிரதான வைத்தியராக செயற்படுகிறார். தற்போது அகவை 68 ஐக் கடந்த இவர் தனக்குப்பின் தனது மகனொருவரை இத்துறை சார்ந்த அறிவுடன் வளர்த்துள்ளமை குறிப்பிடத்தக்கது. மருந்துவகைகளைத் தானே தாயாரிப்பதோடு உதவி தேவைப்படும்போது கூலிக்கு ஆள் எடுத்தும் மருந்துகள் தயாரிக்கின்றார்.

தனக்குப்பின்னர் தன் பிள்ளைகள் வாழவேண்டும் என்பதைவிட இந்த சமூகம் நலம்பெற வேண்டும் என்பதற்காக தன்னால் முடிந்த பாரம்பரிய வைத்தியத்துறை சார்ந்த காரியங்களை முடிந்தளவு செயற்படுத்திக் கொண்டிருக்கிறார் இவ்வைத்தியர். (இவை அவருடனான நேரடிக் கலந்துரையாடல் மூலம் பெற்றுக்கொண்ட தகவல்கள்.)

**சிந்துஉஷா.வி**

**விசக்கடி வைத்தியர் கதிர்காமத்தம்பி தர்மலிங்கம்**
**23/1, சுக்குரு வீதி, அமிர்தகழி.**



பரம்பரை பரம்பரையாக விசக்கடி வைத்தியத்தை பாரம்பரிய முறைப்படி செய்யும் குடும்பத்தில் இருந்து வந்தவரே கதிர்காமத்தம்பி தர்மலிங்கம் ஆவார். கதிர்காமத்தம்பிக்கும் புதுநாயகத்திற்கும் இரண்டாவது மகனாக 1944 ஆம் ஆண்டு வைகாசி மாதம் 12 ஆம் திகதி நாவலடியில் பிறந்த இவர் அமிர்தகழியைச் சேர்ந்த நவமணி என்பவரை 1971 ஆம் ஆண்டு ஆனி மாதம் 2 ஆம் திகதி திருமணம் செய்து கொண்டதன் பிற்பாடு அமிர்தகழியை வசிப்பிடமாகக் கொண்டு வாழ்ந்து வருகின்றார். இவர் க.பொ.த. சாதாரண தரத்தில் சித்தி எய்து கச்சேரியில் (மட்டக்களப்பு மாவட்டச் செயலகம்) பொதுநல சேவையாளராகப் பணிபுரிந்ததும் குறிப்பிடத்தக்கது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தனது அம்மப்பா, அம்மா, அம்மாவின் சகோதரிகள் முதலியோரிடமிருந்தே இவ்வறிவைப் பெற்றுக்கொண்டார். குறிப்பாக சிறு வயதில் தனது அம்மா வைத்தியம் செய்யும்போது அவருக்கு உதவியாக இருந்ததன் ஊடாகவே இக் கை வைத்தியத்தை அம்மாவிடம் இருந்து அறிந்து கொண்டார். தனது அம்மாவிடம் இருந்து பெற்றுக்கொண்ட அறிவை திருமணத்திற்கு முன் சிறியளவில் பயன்படுத்திய இவர், தனது திருமணத்திற்குப் பின்னர் தனது அரச வேலையுடன் விசக்கடி வைத்தியத்தையும் விரும்பி முழுதளவில் செய்யத் தொடங்கினார். ஆரம்பத்தில் சிறிய விசப்பூச்சிகளினால் பாதிக்கப்பட்டவர்களுக்கு மருந்து செய்யத்தொடங்கியவர் காலப்போக்கில் பாரிய விசக்கடிகளுக்கும் மருந்து செய்தார்.

விசப்பூச்சிகளின் தன்மைகளுக்கேற்ப மருந்துகள் வேறுபடும் எனவும், ஆனால் தெய்வத்தை நினைத்து தான் செபிக்கும் மந்திரம் ஒன்று எனவும் குறிப்பிட்ட வைத்தியர், வைத்தியம் செய்ய வருகின்றவர்கள் வரும் விதத்தை வைத்துக்கொண்டும், அவர்கள் கூறும் அறிகுறிகளை வைத்துக்கொண்டும் மருந்து செய்வதாகச் சொன்னார். தங்களது இடம் ”வரவுக்குரிய இடம் இல்லை செலவுக்குரிய இடம் எனவும்” தாங்கள் வைத்தியம் செய்ய வருகிறவர்களிடம் பணம் கேட்டுப்பெறுவதுமில்லை, அவர்கள் சந்தோசமாக தருவதையே பெற்றுக்கொள்வதாகவும், இது தங்களுக்கு கடவுள் வழியால் வந்த புண்ணியம் என்றும் சந்தோசமாகக் கருதினர். குறிப்பாக கொவிட் 19 காலப்பகுதியிலும் தொற்றுக்கள் ஏற்படும் ஆபத்துக்கு மத்தியிலும் கணவனும் மனைவியுமாக இருவரும் ஒருவருக்கொருவர் பக்கபலமாக இருந்து இன்றுவரை தங்களது சேவையைச் செய்து வருகின்றனர். அத்துடன் தனது மருத்துவக் குறிப்புகளை கொப்பியில் எழுதியும் பேணி வருகின்றார்.

தர்மலிங்கம் ஐயாவின் மனைவி நவமணி 1948 ஆம் ஆண்டு ஆடி மாதம் 18 ஆம் திதி பிறந்தார். நவமணி அம்மா ஏழாந் தரம் வரை படித்திருந்தாலும் தனது கணவனின் வைத்தியத் தொழிலுக்கு பக்கபலமாக நின்று அவருடன் சேர்ந்து வைத்தியம் செய்பவராக இருக்கிறார். மாத்திரைகள் தயாரிப்பதுடன் விசப்பூச்சிகளின் தன்மைகள் பற்றியும் அவை கடித்தால் வரும் பக்க விளைவுகள் பற்றியும் ஐயாவுக்கு நிகராக அறிந்துள்ளார். மருந்து செய்ய வருகின்றவர்ளுக்கு தனது கணவருடன் கூடவே இருந்து அறிவுரைகள் வழங்குபராகவும், முகிலிகளின் தன்மைகள் பற்றியும் ஆழமாக அறிந்து வைத்துள்ளார்.

இவர்கள் இருவரும் ஒருவருக்கொருவர் பக்கபலமாக இருந்து இன்றுவரை விசக்கடி வைத்தியம் செய்வது எங்கள் சமூகம் பெற்றுக்கொண்ட கொடையாகும்.

**நிறோஷினிதேவி. ம**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அன்பும் அறமும் கொண்ட உணவு

தோட்டம் செய்வோமே - தோட்டம் செய்வோமே
பள்ளிக்குப் போய் வந்து தோட்டம் செய்வோமே
அட வாங்கோ நண்பர்களே எம் அருமை நண்பர்களே
பள்ளிக்குப் போய் வந்து தோட்டம் செய்வோமே
ஆமாம் நல்ல உணவு நமக்கு வேண்டுமே
இயற்கையான உணவு நமக்கு வேண்டுமே
நஞ்சடிக்கா நல் உணவு நம் நிலத்தில் நாம் நட்டு
நோயற்ற வாழ்வு காண்போம் நண்பர்களே!
(தோட்டம் செய்வோமே)
லாபம் மட்டும் வாழ்க்கையல்ல நண்பர்களே!
அன்பும் அறமும் வேண்டும் உணவில் அன்பர்களே!
கப்பலேறி இங்கு வந்து காசு பறிக்கும் சாப்பாட்டை
கைவிடுகின்ற காலம் ஒன்று வராதோ???
(தோட்டம் செய்வோமே)
பூட்டன் பூட்டி போட்ட பயிரின் விதையிது
நம் மண்ணுக்குச் சொந்தமான விதையிது
அன்பு கொண்டு பயிர்கள் செய்வோம்...
அறத்துடனே பகிர்ந்திடுவோம்
பூமித்தாயை மதித்து நாமும் வாழ்வோமே!
(தோட்டம் செய்வோமே)

**கமலா வாசுகி (2021)**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## எங்களின் அறிவில் எங்களின் திறனில்...

லாலல லாலா...

எங்களின் அறிவில் எங்களின் திறனில்
தங்கி நிற்போம் நாங்கள் - தங்கி நிற்போம் நாங்கள்
எங்களின் நிலத்தில் எங்களின் விதைப்பில்
விளைவித்தே வாழ்வோம் - நாங்கள் விளைவித்தே வாழ்வோம்

லாலல லாலா...

உள்ளூர் உணவுகள் நஞ்சற்ற உணவுகள்
விளைவிப்போம் நாங்கள் - விளைவிப்போம் நாங்கள்
உள்ளூரில் கிடைக்கும் உணவின் வகைகளை
ஏற்று வாழ்ந்திடுவோம் - நாங்கள் ஏற்று வாழ்ந்திடுவோம்

இயற்கைப் பசளை வகைகளை நாங்கள்
உற்பத்தி செய்திடுவோம் - உற்பத்தி செய்திடுவோம்
வீட்டின் அருகே பயிர்களை நாட்டி
காய்கறி பெற்றிடுவோம் - நாங்கள் காய்கறி பெற்றிடுவோம்

லாலல லாலா...

பாரம்பரிய பயன் தரும் உணவை
நாளும் உண்டிடுவோம் - நாளும் உண்டிடுவோம்
பாரம்பரிய உணவு வகைகளை
பேணிக்காத்திடுவோம் - நாங்கள் பேணிக்காத்திடுவோம் -

கட்டுப்படுத்தும் வாழ்க்கைமுறைகளை
நீக்கி எழுந்திடுவோம் - நீக்கியே எழுந்திடுவோம்
சூழலிணைந்து வாழும் வழிகளை
மீளவும் ஆக்கிடுவோம் - நாங்கள் மீளவும் ஆக்கிடுவோம்

லாலல லாலா...

நோயற்றே வாழ்வே குறைவற்ற செல்வம்
என்பதை உணர்ந்திடுவோம் - என்பதை உணர்ந்திடுவோம்
நஞ்சற்ற உணவை நாளும் உண்டு
நலமாய் வாழ்ந்திடுவோம் - நாங்கள் நலமாய் வாழ்ந்திடுவோம்

உண்ணும் உணவில் உயிர்களின் நலன்களை
உயர்வாய் எண்ணிடுவோம் - உயர்வாய் எண்ணிடுவோம்
உடலுக்கு நஞ்ஜை ஊட்டும் உணவை
உண்ணாதிருந்திடுவோம் நாங்கள் உண்ணாதிருந்திடுவோம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

லாலல லாலா...

எங்களின் அறிவில் எங்களின் திறனில்
தங்கி நிற்போம் நாங்கள் - தங்கி நிற்போம் நாங்கள்
எங்களின் நிலத்தில் எங்களின் விதைப்பில்
விளைவித்தே வாழ்வோம் - நாங்கள் விளைவித்தே வாழ்வோம்

**சி. ஜெயசங்கரின் (மூன்றாவது கண்) நாடகப் பாடலை அடிப்படையாக வைத்து அ.சி.மி.திருச்சபை முன்பள்ளி ஆசிரியர்களது செயலமர்வில் தயாரிக்கப்பட்டது - மார்கழி 2016**

## வாழி - பூமியே இயற்கையே...

தந்தனத னாதனத னாதனத னானா
தனனாதா னாதந்த னாதந்த னானா(2)

பூமியே இயற்கையே நீ வாழி வாழி
பல்லுயிரும் வாழ உன் வரம் தந்தாய் வாழி
மாரியே நீர் பொழிவாய் நீ வாழி வாழி
ஊற்றுக்கள் சொரியட்டும் நீர் வாழி வாழி
காற்றுடன் எரிக்கும் வெயில் பனிப் பொழிவும் வாழி
பொங்கும் கடல் மலைகளுடன் பல்மண்ணும் வாழி

தந்தனத னாதனத னாதனத னானா
தனனாதா னாதந்த னாதந்த னானா

மண்ணுக்குள் வாழும் நம் உயிர்கள் வாழி
காற்றிலும் கலந்துள்ள சிற்றுயிர்கள் வாழி
ஓடுமுயிர் ஊரும் உயிர் பறக்கும் உயிர் வாழி
நிற்பதுவும் நடப்பதுவும் நீந்துவதும் வாழி
ஆழத்தில் வேரூன்றும் பெருமரங்காள் வாழி
அடியோடி நிலம் பரவும் புல்லினங்காள் வாழி

தந்தனத னாதனத னாதனத னானா
தனனாதா னாதந்த னாதந்த னானா

பூமியே இயற்கையே நீ வாழி வாழி
பல்லுயிரும் வாழ உன் வரம் தந்தாய் வாழி
சந்திரரே சூரியரே வாழிய வாழி
அண்ட சராசரங்கள் வாழி நீடுழி!!!

**கமலா வாசுகி - 29.01.2021**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நன்னிலம் திறப்புவிழா நிகழ்ச்சிநிரல்

**இடம் : சிந்துஉஷா இல்லம், மஞ்சந்தொடுவாய்**

**காலம் : 19/03/2022 - சனிக்கிழமை**

| **நேரம்** | **நிகழ்ச்சிகள்** |
|---|---|
| பி.ப. 03.00 | குழுப் பாடல் - நாங்கள் வாழவேண்டும். |
| பி.ப. 03.10 | குழுப் பாடல் - தோட்டம் செய்வோமே. |
| பி.ப. 03.15 | தோட்டத்தைச் சுற்றிப் பார்த்தல். |
| பி.ப. 03.45 | குழுப் பாடல் - எங்களின் ஊரில். |
| பி.ப. 04.00 | நன்னிலம் வரலாற்றுப் பின்னணி சிற்றுரை- சிந்துஉஷா மற்றும் பொதுக் கலந்துரையாடல். |
| பி.ப. 04.30 | குழுப் பாடல் - உண்மை அறிவைத் தேடிப்பெற்று உயர்வுகொள்வோம். |
| பி.ப. 04.40 | "பச்சைப் பூமி விட்டிலே" - கதைப்பாடல் ஆற்றுகை சி.ஜெயசங்கர், ஜோ. கருணேந்திரா, து. கௌரீஸ்வரன் |
| பி.ப. 05.00 | குழுப்பாடல் - வாழித்தரு. |






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org